**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**அசல் வழக்கு எண்.** 61/2022

ஹஜா மைதீன் த/பெ.முகமது அப்துல்லா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.மா.பாலாஜி , உதவியாளர், நிலை–III என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஹஜா மைதீன் | தொழில் | |
| த/பெ. | முகமது அப்துல்லா | வயது | 44 / 2026 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

நாள் : 29.01.2026

பி.வா.சா.2

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். நான் அரசர்குளம்மேல்பாதி கிராமத்தை சேர்ந்தவர். என்னை தாவா வழக்கில் சாட்சியம் அளிக்க 1ம் பிரதிவாதி சகுல் ஹமீது அழைத்து வந்தார். சாகுல் ஹமீது சொந்த ஊர் சிவகங்கை ஆகும். சாகுல் ஹமீது தற்போது அரசர்குளத்தில் இருக்கிறார். எனக்கு தற்போது வயது 44 ஆகும். எனக்கு சாகுல் ஹமீதை எனக்கு விபரம் தெரிந்தில் இருந்து தெரியும். சாகுல் ஹமீது எனக்கு இடப்பிரச்சனை ஏற்பட்டபோது பக்கபலமாக இருந்து உதவி செய்து இருக்கிறார் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகளான ஹமீதாம்மாள், ஜன்னத்பேகம் ஆகியோரை தெரியும். 1,2 பிரதிவாதிகள் தகப்பனார் பெயர் சம்சுதீன் ஆகும்.

2. சம்சுதீன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது. நானும் சம்சுதீன் குடும்பத்தினரும் ஒரே தெருவில் வசிக்கவில்லை. நான் மேலத்தெருவில் வசிக்கிறேன். சம்சுதீன் குடும்பத்தினர் நடுப்பாதியில் வசிக்கிறார்கள். சம்சுதீன் உடன்பிறந்தவர்கள் கலந்தர் மைதீன், சையது முகமது, அப்துல் முகமது, பாத்தமுத்து ஆகியோர் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சம்சுதீன் உடன்பிறந்தவர்களுக்கு இடையே அவர்களுக்கு சொந்தமான சொத்தைப்பொறுத்து பாகப்பிரிவினை எதுவும் ஏற்பட்டதா என்பது எனக்கு

தெரியாது என்றால் சரிதான். அதனால் வழக்கு சொத்து யாருக்கு ஒதுக்கினார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சம்சுதீன் விவசாயம் செய்தார்.
3. வழக்கு சொத்துக்கு அருகில் எனக்கு சொத்து எதுவும் இல்லை. வழக்கு நடக்கும் சொத்துக்கும் என் வீட்டிற்கும் இடையே ஒரு பர்லாங்கு தூரம் இருக்கும். நான் ஒரு பர்லாங்கு தூரம் இருக்கும் என்பது சொல்வது தவறு என்றாலும் எனது வீட்டிற்கும் தாவா சொத்துக்கும் இடையில் 4 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. தற்போது சம்சுதீன் குடும்பத்தினர் விவசாயம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை நான் பார்த்து இருக்கிறேன். வழக்கு சொத்தை யாரும் எனக்கு காட்டவில்லை. வழக்கு நடக்கிறது என்பது எனக்கு சாகுல் ஹமீது சொல்லி தான் தெரியும்.
4. வழக்கு சொத்தில் எத்தனை வீடு கொட்டகை இருக்கிறது என்றால் வழக்கு சொத்தில் ஒரு கொட்டகை இருக்கிறது. அந்த கொட்டகையில் யாரும் தங்கமாட்டார்கள். அந்த கொட்டகையில் மின் இணைப்பு இல்லை. பக்கத்தில் உள்ள கொட்டகையில் மின்இணைப்பு இருக்கிறதா என்றால் நான் அதை கவனிக்கவில்லை. வழக்கு சொத்து இருக்கும் அமைப்பு தெரியாமல் சாகுல் ஹமீது சொல்லிக்கொடுத்ததான் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சுதாகர் வழக்கு சொத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். சுதாகர் குடியிருக்கும் இடத்தை சுற்றி ஆடு, மாடு இருக்கிறது என்றால் சரிதான். சுதாகர் குடியிருக்கும் இடத்திற்கு அருகில் வைக்கோல் போர் இருக்கிறதா என்றால் நான் கவனிக்கவில்லை. மேற்படி இடத்திற்கு அருகில் குப்பைக்குழி இருக்கிறதா என்றால் நான் கவனிக்கவில்லை. வழக்கு சொத்தில் தற்போது விவசாயம் செய்யவில்லை.
5. வழக்கு சொத்தில் 1,2 சிறிய மரங்கள் இருக்கிறது. வழக்கு சொத்து எப்படி இருக்கிறது என்பது தெரியாமல். சாகுல் ஹமீது இடத்தை சரிசெய்து கொடுத்ததால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
**மறுவிசாரணையில்லை.**